உ

சிவமயம்



வடதமிழ் ஈழம் வடமராட்சி
வடதுன்னையம்பதி வாசரும்,
உயர்சைவ வேளாண்குல திலகரும்,
பிரசித்த நொத்தாரிசு கதிரவேற்பிள்ளை வழிவந்த
தா. கணபதிப்பிள்ளை (பொலிஸ் விதானையார்)
அவர்களினதும், விசுவநாதர் சின்னம்மாளினதும்
அருந்தவ ஏகபுதல்வனும்,
காலஞ் சென்ற
திருமதி தா. பரமேஸ்வரியினது
அன்புக் கணவருமாகிய
உயர்திரு.

# க. தாமோதரம்பிள்ளை

(இளைப்பாறிய முகாமையாளர் விற்பனைத் திணைக்களம்)
அவர்களது பிரிவுகுறித்த

# நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமரர் திரு க. தாமோதரம்பிள்ளை

(இளைப்பாறிய முகாமையாளர், விற்பனைத் திணைக்களம்)

மலர்வு:
01.12.1929

உதிர்வு:
02.12.1993

## திதி நிர்ணய வெண்பா

*ஆண்டாகும் ஸ்ரீமுக கார்த்திகையைச்சார் அபர*
*பக்கத் திருதியை எனும் திதியே — மிக்கநல*
*தேசமைந்த மகன் தாமோதரம் பிள்ளை தீயேந்து*
*மீசனடி யுற்றடைந்த தினம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# தோத்திரப் பாக்கள்

திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கி பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மை யேயாய சிவபத மளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கை
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனை
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னை கண்டு கண்டுள்ளம்
குளிர எனகண்கள் குளிர்ந்தனவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம் பக்தர்கள்
வஞ்சகர் போய கல
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமை கோன்
அடியோமுக் கருள் புரிந்து
பின்னைப் பிறவி அறுக்க நெறிதந்த
பித்தர்க்குப் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மலரி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.

## திருப்புகழ்

உம்பர்தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காகரவுற் றருள்வாயே
தம்பிதனைக் காகவனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர் தமக்கான நிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமானே.

திருச்சிற்றம்பலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# வழிபடு கடவுளர் துதி

## வெல்லிக்கந்தோட்ட விநாயகர் துதி

அன்று கயமுகற் கொன்றொரு மூசிக வாகனமாய்
வென்று சிறந்தவ வெல்லிக்கந் தோட்ட விநாயகனே
பொன்று முடலம் புவிசேர வைத்துன் னடியடைந்தேன்
நின்ற னருளுக் கிரந்தென்னை ஆள்க நலிந்தனனே.

சொல்லும் பிரணவத் துட்பொரு ளாகுவி நாயகனே
அல்லல் உலகத் துறவை அறத்கே னருள்சுரக்கும்
வல்ல கணபதி வெல்லிக்கந் தோட்டத் தமர்ந்தவனே
நல்ல திருவடி சார்ந்துய்யு மாறருள் நல்குதியே.

கொம்பொன் றிருசெவி கண்மூன்று நால்வாய் கரமைந்தென
அம்பொன் னுருவா யமர்ந்தடியார் துயர் தீர்ப்பவனே
வெம்பும் வினைப் பயனான வுடலினை விட்டுவந்தேன்
உம்பொன் னடியே அடியேனுக் கீக வணங்கினனே.

## புறத்திச் சங்கிலி காளி துதி

உலகு புரக்கும் ஒளிவடிவே
    உயிர்கட் கெல்லாம் தாயானகாளி
அலகில் சூடல் புரியீசன்
    அயலே அமரும் அருளுருவே
நிலவும் குடும்பத் தெய்வம்நீ
    நெஞ்சம் உவக்க அருளுவாயே
பொலியும் பாதப் பேறிரந்தேன்
    பொலிந்த அருள்செய் காலியாத்தையம்மா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் துதி

நாமமுனக் காயிரமாம் நானுமுன்தன் கோயிலிலே
நாமமது பூசிக் களித்தேனே — தாமமணி
கின்ற உகரத்து தாமோ தரவருள்க
உன்ற னடியே துணை.

பாலின் கடல்மேலே பாம்பணையிற் தூங்குபவ
மாலிங் கழிந்து தெளிந்திட்டேன் — சாலவுயர்
உன்னுருவப் பீடதனை உள்ளார ஏத்தினனுன்
பொன்னடியே சார வருள்க.

சங்குமொரு சக்கரமும் கைக்கொண்டாய் வல்லிபுரம்
தங்கியடி யார்க்கருளும் தெய்வமே — அங்குனக்குப்
பூவதனைத் தந்துநிதம் போற்றிப் பணிந்தேனே
மேவுமடிப் பேறதனைத் தா.

வெண்ணையுண்டாய் சேரியிலே ஆய்ச்சியரின் கார்வலனே
மண்ணையுண்டா யென்றுமுரைக் கின்றார்கள் - மண்ணிலென்றும்
ஏத்த மறவாத என்னையுமுன் பொன்னடிக்கண்
காத்து அருளளிப்பாய் நீ.

நீலநிற வண்ணா நிறையருளின் கண்ணா நீ
கோலமமை நச்சரவைக் கொண்டாயே — ஞாலமிசை
நாளுமன்போ டேத்திநின்ற தாயேனை ஆண்டருள்க
தாளின் துணை தந்திடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. க. தாமோதரம்பிள்ளை வாழ்வில்...

சீருந், திருவும், கல்வியும், எழிலும் தேங்கித் திகழ்கின்ற சிறந்த கல்விமான்கள் வாழும் வடமராட்சிப் பகுதியில் துன்னாலை வடக்கில் சைவநெறி நின்ற வேளாண்குல பெருமகனான கணபதிப்பிள்ளை சத்துருசிங்கமும் (பொலிஸ் விதானையார்) சின்னம்மாளும் செய்த அருந்தவத்தினால் ஏகபுத்திரனாக திரு. தாமோதரம்பிள்ளை அவதரித்தார்.

இவர் அருந்தவ மகனாக இருந்தமையால் பெற்றோரின் செல்வச் செழிப்பில் செல்லப் பிள்ளையாக வளர்ந்தார். இவர் தனது ஆரம்பநிலைக் கல்வியை யா/துன்னாலை மெதடிஸ்தமிசன் தமிழ்க்கலவன் பாடசாலையிலும் கற்று, பின் இடைநிலைக் கல்வியை யா/திருஇருதயக் கல்லூரியில் கற்று S. S. C. தேறி முதன்மை பெற்றிருந்தார்

விற்பனைத் திணைக்களத்தில் முகாமையாளர் பதவி கிட்டிவிட அங்கு முதன்மையாக பணிபுரிந்து மேலோங்கினார். இவர் மட்டக்களப்பு, திருகோணமலை, சாவகச்சேரி, கிளிநொச்சி, அநுராதபுரம், யாழ்ப்பாணம். வல்வெட்டித்துறை, பருத்தித்துறை சுன்னாகம் ஆகிய இடங்களில் பணிசெய்தார். அதேபணியில் 1969ல் மேலதிகப் பயிற்சிக்காக புலமைப்பரிசில் மூலம் அவுஸ்ரேலியா சென்று தனது கல்வி, கேள்வி, திறமைகளை வெளிப்படுத்தினார்

1949ம் ஆண்டு தை மாதம் வடிவேலுவினதும் அருமை மாமி சிவக்கொழுந்துவினதும் மகளான மங்கை நல்லாள் சிரேஷ்ட புத்திரி பரமேஸ்வரியைக் கைப்பிடித்து இல்லறம் என்னும் நல்லறத்தை மேற்கொண்டார். இதன் பயனாக கணபதிப்பிள்ளை (கூட்டுறவுப் பரிசோதகர்), புஷ்பராணி, செல்வானந்தம் (பொலிஸ் உத்தியோகத்தர்), காலம்சென்ற உதயகுமார் (பொலிஸ் பரிசோதகர்), சிவகுமார் (சவுதி அரேபியா), சுபேந்திரகுமார் ஆகிய நற்பிள்ளைகளைப் பெற்று அவர்களின் உயர்வு கண்டு இன்புற்று கவலையற்று வாழ்ந்தார். ஆசைக்கொரு பெண்ணும், ஆஸ்திக்கு ஐந்து ஆண்களையும் பெற்று ஏறுபோல் பீடுநடை நடந்தார். இவரது மருமக்கள் திரு. ம. செல்வராசா (பிரதம பொறியியலாளர், நியூசிலாந்து), திருமதி க. இந்திரா தேவி, திருமதி செ. சிவானந்ததேவி, திருமதி உ. செல்வராணி ஆவர். பேரப்பிள்ளைகள் செ. இளங்கோ (பொறியியல் பீட மாணவன், நியூசிலாந்து), செ. குமணன், செ. மயூரன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செ. பரதன், க. செந்தூரன், க. ஐங்கரன், க. சசிதரன், க. அரவிந்தன், செ. பிரதீபா, செ. பிரமிளா, செ. பிரவீணா, செ. சுசித்ரா, உ. ரமேஸ்குமார், உ. மேகலா ஆகியோரின் அன்புப் பேச்சினில் மனமகிழ்வுற்றார்.

இவர் பரம்பரை இயல்புகளுக்கேற்ப கம்பீரமான உரத்த பேச்சும், நுண்ணறிவும், வாக்குச் சாதுரியமும், செயற்திறனும் மிக்கவர். கடவுள்பக்தி மிக்கவர். ஏழை எளியவர்கட்கு தம்மாலியன்ற உதவி, உணவு, உடை, உறையுள் கொடுத்து காத்தவர். அன்னதானம் செய்வதில் மகிழ்வு கொள்பவர். தனித்திருந்தும் நிர்வாகத்தைத் திறம்பட மேற்கொள்பவர். இவர் ஒரு கருமவீரனும். அஞ்சா நெஞ்சமும் படைத்தவராவர் வெல்லிக்கந்தோட்ட பிள்ளையார் கோயில் பரிபாலன சபையின் காரியதரிசியுமாவார். இவர் தமது பரம்பரைக் கோயிலின் அனைத்து கருமங்களையும் முன்னின்று நடத்தினார். இவரது அனைவில் எத்தனையோ பேர் உதவி பெற்றுச் சென்றமையை இன்றும் காணலாம்.

சிறப்பாக இவர் சாஸ்திர விஞ்ஞானத்திலும் கைதேர்ந்தவராகக் காணப்பட்டார். பலர் தமது எதிர்கால நடவடிக்கைகளை சிறு தவறுமின்றி கூறியதாக கூறுகின்றமை இவரது தீர்க்க தரிசனத்துக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

அருமை மனைவி பரமேஸ்வரியைப் பிரிந்த கவலையுடன், அன்புத்தம்பி சிவலிங்கத்தைப் பிரிந்து மனம் நொந்திருந்த வேளை, ஆசைமகன் உதயகுமாரின் பிரிவு நெஞ்சில் பேரிடியாகி மிகக் கவலையடைந்தார்.

இவ்வாறாக வாழ்ந்த பெருமகன் க. தாமோதரம்பிள்ளை அவர்கள் 2-12-1993ல் வாழ்க்கை நிலையாமையை உணர்த்தி தாமோதரனாரின் கழல் பற்றினார்.

ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. க. தாமோதரம்பிள்ளை அவர்களின்
(விற்பனைத் திணைக்களம், முகாமையாளர்)
பிரிவு குறித்த

# இரங்கற் பாக்கள்

## சிரேஷ்ட புத்திரன் கணபதிப்பிள்ளை புலம்பல்

நேயமுடன் எனைப் பேணிக் காத்த அப்பா
கிளாலிக் கட லுக் கப்பாலே இருக்கும் அன்புத்
தெய்வமணைய பிறவியுனைக் கண்டுபேசும்
தெவிட்டாத ஆசையுடன் இருக்கும் என்னை
நாயாக அலையவிட்டு நடந்திட்டாயோ.
நானினிமே லாரையினி அப்பா வென்பேன்
ஓயாது கண்ணீரைச் சிந்துகின்றேன்
உற்றதுயர் யுகம்சென்றும் மாறுமோ அப்பா!

## ஏகபுத்திரி புஷ்பராணி புலம்பல்

அன்புதனை மழையெனவே சொரிந்து காத்து
அன்புடைய கணவனுக்கு எனைக் கொடுத்து
உயர்வான ஏற்றம் கண்டு மனம் மகிழ்ந்து
உற்ற பொருள் அனைத்தும் உவக்க தரும்
ஒப்பில்லா அன்புமணி ஆசை அப்பாவை
நெடுங் கடலுக் கப்பாலே இருக்கும் நான் என்றும்
புண்ணிடையே கூர்வேல்தான் நுழைந்த துன்பம்
படுகின்றேன் அலறுகின்றேன் தவிக்கின்றேனே.

## புதல்வன் செல்வானந்தம் புலம்பல்

பாசமதை அடைமழை போல் சொரிந்து காத்து
பகலிரவு அணைத்து வளர்த்திட்ட எந்தன்
பேசரிய அப்பா நீங்கள் பிரிந்த சேதி
படர்தழலில் புழுவாகி விட்டதிங்கே
மண்ணிலுங்கள் ஆசைமுகம் காணுவனோ
மனமினிக்க பேசுவதும் கேட்பனோ நான்
அன்பு மகன் முகம் பார்க்கா தெங்கே சென்றீர்
அவலமுற்று அழுகின்றேன் தவிக்கின்றேனே.

## புதல்வன் சிவகுமார் புலம்பல்

தோளிடத்தும் கைகளிலும் மடியின் மேலும்
தூக்கியென்னை வைத்தணைத்து வளர்த்த அப்பா
எண்ணெழுத்து கற்பித்து ஏற்றமுற வைத்தவரே
என்றென்றும் இருப்பாய் என்று நான் இருக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடுங் கடலுக்கப்பாலே இருக்கும் அன்புத் தெய்வமே
நேச மகன் முகம்பார்க்கா தெங்கே சென்றீர்
ஆசைமுகம் இனிக்காண மாட்டாத வாறு
அவசரமாய் போனதெங்கே தேம்புகின்றேன் தவிக்கின்றேனே

### புதல்வன் சுபேந்திரகுமார் புலம்பல்

அள்ளியணைத் தன்பாலே வளர்த்த எந்தன்
ஆசை அப்பா இயலாத பிள்ளை என்பதாலே
கொள்ளை யன்பு பெருக கேட்ட போதும்
குறையின்றி தந்திட்டீர் இரவுபகல்
அயலாக நீங்காதே ஆதரித்த தெய்வமே
அள்ளியிரு கைகொண்டுங்கள் தலையின் மேலே
கொள்ளியிட்டேன் குடமுடைத்தேன் குழறுகின்றேன
கொண்டதுயர் என்மட்டில் யாதோ? அறியாயோ அப்பா.

### மருமகன் ம. செல்வராசா புலம்பல்

நிறைபாசம் தனைத் தந்து என்னிடத்தில்
நிதம் பழகி நின்றிட்ட மாமா நீங்கள்
குறை காண மாட்டீர்கள் இனிய பேச்சால்
குவலயத்தில் அனைவரையும் காத்தீர் கொட்டு
பறையோடு சென்றிட்டீர் நானோ இங்கு
பதைப தைத்து துடிக்கின்றேன் புலம்புகின்றேன்
அறியேனிங் காறவழி அலறுகின்றேன்
அன்புருவே மாமா துயர் ஆறேனையோ!

### மருமக்கள்: க. இந்திராதேவி, செ. சிவானந்ததேவி, உ. செல்வராணி புலம்பல்

பெருந்தவத்தால் பெற்றிட்டீர் இமைதான் கண்ணை
பேணுதல் போல எந்நாளும் பேணலானீர்
அருமை மிகு மாமாவே குறைகள் ஏதும்
அறியாத விதத்தில் பல்வகைப் பண்டங்கள் தந்தீர் இன்றோ
பெரு விதியின் பயனாக பிரிந்தீர் நம்மைப்
பேசரிய இத்துயரம் ஏழேழு பிறவியிலும் நீங்குமாமோ
வரு பிறவி அனைத்திலுமே அன்பு மாமாவாக
வையகத்தில் திகழுதல் கேட்டோம் ஐயோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பேரப்பிள்ளைகள்:** *செ. இளங்கோ, செ. குமணன், செ. மயூரன், செ. பரதன், க. செந்தூரன், க. ஐங்கரன், க. சசிதரன், க. அரவிந்தன், செ. பிரதீபா, செ. பிரமிளா செ. பிரவீணா, செ, சுசித்தா, உ. ரமேஷ்குமார், உ. மேகலா* **புலம்பல்**

கண்டதும் ஆசைமுகமது காட்டி யருகிருத்திக்
கொண்டதும் இன்பஉரைகள் புகன்றதும் அற்றொழிய
வித விதமாய் பட்சணங்கள் விரும்பிய படியே தந்து
விந்தை செய்த அம்மப்பா, அப்பப்பா நீங்கள்
தத்தித் தவழ்ந்துவர தாவி யணைத் தெடுத்து
முத்தங் களாயிரத்தை தந்தவரே—சித்தமிங்கே
நூறாகவே பிளக்க நாம் துவண்டு வாடவிட்டு
நீறாக ஏன் சென்றீர் சொல்.

**மாமன் விநாயகமூர்த்தி, உடன்பிறவா சகோதரர்கள் வெ. தர்மபாலன், த. சிவனடியார், உடன்பிறவா சகோதரி: இ. இந்திராணி புலம்பல்**

பெருகுதே கண்ணீராறு
பிளக்குதே நெஞ்சந் தன்னை
உருகுதே ஊனே அண்ணா
உன் பிரிவாலே ஊரே
கலங்குதே கவலை மீறிக்
கருகுதே சுடலை தீயிற்
கருகியா மாண்டா யையோ
கலக்கமே சேர்ந்த தையோ.

**சிறிய தந்தையர்: பத்மநாதன், குமாரசுவாமி புலம்பல்**

வீட்டிற்கு வந்திடின் வாருங்கள் என்று சொல்லி சுகநலன்கள்
கேட்டுப் பழகிய பேரன்பு கொண்ட உனையெருமை
மாட்டிற் திரியமன் கொன்றழித்தானோ—கொடியவனை
நாட்டிற் தருமனென்றே யுரைத்தாரிது நல்லதுவோ!

**மைத்துனிமார்: சி. திலகவதி, சி. மதியாபரணம், சி. மகேஸ்வரி புலம்பல்**

கூடிப் பிறந்திடு சோதரன் போலன்பு காட்டி நிதம்
கூடிப் பழகிய அத்தான் ஆவிவிடுத்ததென்ன
வாடிக் கதறி வதங்குகின்றோம் நெஞ்சுபிளந்துவைத்து
ஓடிப் பறந்தது என்துயர் மேனி உருகுகின்றோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டால் முகத்தில் கனிவு மிகுந்திடப் பேசிடுவீர்
பண்டேது பாவம் புரிந்தனம் ஒரு கொடியில் மூன்று பூக்கள்
பறிகொடுத்தோம் பரிதவிக்கின்றோம்
கண்டு ஆற மார்க்கம் இனியில்லை கண்கள் கலங்குகின்றோம்
உண்டான சோகம் இதுதீர மாட்டாமல் அழுகின்றோமையா,

பெறாமக்கள்: வி. கேதீஸ்வரன், வி. ஜெகதீஸ்வரன்,
வி. பத்மாசனி, வி. சரவணபவதீஸ்வரன்,
சி. சிவரஞ்ஜனி, சி. மனோரஞ்சன்,
சி. சிவகலா, சி மதிவண்ணன், சிவரூபி,
சிவராணி, சிவகுமார், சிவரூபன் புலம்பல்

பெற்றிட்ட மக்களுக்கோர் வகையன்பு பெறாத மக்கள்
உற்றிடில் வேறன்பு எவ்றிடும் பேதம் அறிந்ததில்லை
முற்றிய பாச வடிவுடை பெரியப்பாவே உங்களை
சுற்றியழுதனம் சோகம் பெருகிட நைந்தனமே.

அஞ்சாதீர் எதற்கும் நானிருக்கின்றேன் என்றீர்கள்
அஞ்சாத ஆண்சிங்கமே வார்த்தைகள் பொய்யோ
பண்புள்ள பெரியப்பா நீரேன் பரனாரின் பாதமணையலுற்றீர்
கண்சிந்து நீருன் சடலத்தி லூற்றி கதறினமே.

மைத்துனர் மைத்துனியர் புலம்பல்

நவரட்ணராஜா, பரமேஸ்வரன், யோகேஸ்வரன்,
மகேஸ்வரன். மங்களேஸ்வரன், கருணேஸ்வரன்
ஸ்ரீரங்கராஜா, சிவப்பிரகாசம், இராமச்சந்திரன்,
ஆனந்தகிருஷ்ணமூர்த்தி, சிவமணி, இராசமணி,
பூரணேஸ்வரி, யோகேஸ்வரி, புஷ்பவசந்தா,
வசந்தமல்லிகா, சாந்தகுமாரி

கூடிப் பிறந்த சோதரன் போலன்பு காட்டிநிதம்
கூடிப் பழகிய மைத்துனா ஆவி விடுத்ததென்ன
வாடிக் கதறி வதங்கிடுகின்றோம் யமனுடனே
ஓடிப் பறந்தது ஏன் துயர்மேவி உலைகிறமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாமிமார்: அன்னப்பிள்ளை, நாகரத்தினம், திரவியம் செல்வரத்தினம் புலம்பல்

மாரியைப் போல வரையாது வழங்கும் கைகள்
மண்டு சுடலைத் தீயில் கருகிற்றாமோ
பாரியைப் போலுவந்தளிக்க எண்ணும் நெஞ்சம்
படர்தீயிற் கருகியதோ குடும்ப மேத்தும்
சீரியனே மருமகனே இறந்த சேதி
தீசெவியிற் புகுந்ததென வருந்தினோமே
ஆரினிமேல் உன்னைப் போலாறும் மார்க்கம்
அளிப்பாரிங் கறியோமே அலறினமே.

## வீட்டில் பணிபுரிந்தோர் புலம்பல்

சிரித்த வாயல்லால் வேறு
சினந்த வாய் கண்டோ மில்லை
உரித்துள்ள உறவோர் போல
உயரன்பு காட்டக் கண்டோம்
மரித்ததோ ஆவியென்ற
மாற்றத்தால் மலைத்தோம் தீயோ
எரித்தது ஐயா தன்னை
இல்லையெம் நெஞ்சைத் தானே.

## உற்றார், உறவினர், நண்பர்கள் புலம்பல்

சுத்தமிகு கையுண்டு சுவைகொள் பேச்சு
சமூகத்தில் தொண்டு செய்யும் உள்ளப்பாங்கு
எத்தனை தான் துயர்கண்டும் ஏங்கா நெஞ்சு
எதிர்த்தோரை வென்றணைக்கும் இதயதாகம்
அத்தனையும் உள்ளவரே எங்கள் தாமோதரம்பிள்ளை
அரன்பாதம் அடையவென பிரிந்தீரெங்கள்
உத்தமனே உமக்கந்த பேறே கிட்டும்
உயரின்பம் கண்டிடுக சாந்தி! சாந்தி!!

## தேற்றம்

வந்து பிறந்தவுயிர் வாழ்வு முடிந்துவிட
வந்த வழி மறையும் உண்மையிது—நந்தமரும்
மன்னன் தாமோதரம் பிள்ளை விதிவிலக்கோ
மன்னும் அமைதி பெறுவீர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவில்கின்றோம்

எமது குடும்பத் தலைவர் அமரர் கணபதிப்பிள்ளை தாமோ தரம்பிள்ளை அவர்களின் அமரத்துவ வேளையில் வந்து கலந்தோர், உடனிருந்தோர், வைத்தியசாலையில் உதவி பல புரிந்த அதிகாரிகள், எமது துயரில் கலந்தோர், முன்வந்து உதவி புரிந்தோர், உற்றார், உறவினர், நண்பர்கள், செய்திகள் அனுப்பியோர், அந்தியேட்டி சபிண்டீகரண கிரியைகளிற் கலந்து சிறப்பித்தோர் அனைவர்க்கும் இதயநன்றி.

வணக்கம்.

பழைய விதானையார் வளவு,
''புஷ்ப வாசா''
துன்னாலை வடக்கு,
கரவெட்டி.
01-01-1994.

இவ்வண்ணம்
**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**மைத்துனிமார், பெருமக்கள்**

தமிழ்ப்பூங்கா அச்சகம் - நெல்லியடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org